இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

**ஏப்ரல் 8, செவ்வாய் நண்பகல் அன்று வழங்கிய அறிக்கையொன்றில் இத்தகவலை வழங்கியுள்ள திருப்பீடச் செய்தித் தொடர்பகம், திருத்தந்தையின் உடல்நிலை சீராக உள்ளது என்றும், சுவாசம், இயக்கம் மற்றும் குரல் தொடர்பான நலமடைதலில் தொடர்ந்து படிப்படியான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்றும் கூறியுள்ளது.**



# திருத்தந்தை தொடர்ந்து படிப்படியாக நலமடைந்து வருகிறார்!

மூச்சுக்குழல் அழற்சி நோய் மற்றும் மார்புசளிக் காய்ச்சல் காரணமாக, கடந்த பிப்ரவரி மாதம் 14-ஆம் தேதி முதல் உரோமை ஜெமெல்லி மருத்துவமனையில் 38 நாள்களாக சிகிச்சை பெற்று வந்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், மார்ச் 23, ஞாயிறன்று, தனது இல்லம் திரும்பிய பிறகு தொடர்ந்து படிப்படியாக நலமடைந்து வருகிறார் என்று தெரிவித்துள்ளது திருப்பீடச் செய்தித் தொடர்பகம்.

ஏப்ரல் 8, செவ்வாய் நண்பகல் அன்று வழங்கிய அறிக்கையொன்றில் இத்தகவலை வழங்கியுள்ள திருப்பீடச் செய்தித் தொடர்பகம், திருத்தந்தையின் உடல்நிலை சீராக உள்ளது என்றும், சுவாசம், இயக்கம் மற்றும் குரல் தொடர்பான நலமடைதலில் தொடர்ந்து படிப்படியான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்றும் கூறியுள்ளது.

மேலும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், தனது அலுவலகப் பணிகளை மீண்டும் தொடங்கியுள்ளார் எனக் கூறும் அதன் அறிக்கையில் ஆவணங்களைப் பெறுதல், தொலைபேசி அழைப்புகள் செய்தல், நாள்தோறும் திருப்பலியில் பங்கேற்றல், காசாவில் உள்ள திருக்குடும்ப பங்குத்தளத்துடன் தொடர்பைப் பேணுதல் ஆகியவற்றையும் மேற்கொண்டுள்ளார் என்றும் கூறப்பட்டுள்ளது .

ஏப்ரல் 9-ஆம் தேதி திட்டமிடப்பட்டிருந்த திருத்தந்தையின் புதன் பொது மறைக்கல்வி உரை ரத்து செய்யப்பட்டுள்ளது என்றும், இருப்பினும் தயாரிக்கப்பட்ட எழுத்துப்படிவ உரை பொதுமக்களுக்கு வெளியிடப்படும் என்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புனித வாரத் திருவழிபாட்டு நிகழ்வுகளில் திருத்தந்தை பங்கேற்பது குறித்து இன்னும் முடிவுசெய்யப்படவில்லை என்றும், அவரது உடல்நிலை குறித்த மற்றொரு அறிக்கை ஏப்ரல் 11, வெள்ளிக்கிழமையன்று வெளியிடத் திட்டமிடப்பட்டுள்ளது என்றும் கூறுகிறது திருப்பீடச் செய்தித் தொடர்பகத்தின் அறிக்கை.

செல்வராஜ் சூசைமாணிக்கம்- வத்திக்கான்

# அல்லேலூயா! கிறிஸ்து மரித்தார், கிறிஸ்து உயிர்த்தார்!

இந்த மகிழ்ச்சியான ஈஸ்டர் அறிவிப்பு நமது கிறிஸ்துவர்கள் அனைவருடைய இதயத்திலும் நீங்காமல் இருக்கும். கிரேக்கத்தில் “கெரிக்மா” என அறியப்படும் இந்த இறைச்செய்தியின் மையக் கூறு, ஒவ்வொரு திருப்பலியிலும் நாம் சொல்லும் பதில்தான். குறிப்பாக குருவானவர், “நம்பிக்கையின் மறைப்பொருள்” என சொல்லும்போது, நாம்:

“உமது மரணத்தை அறிக்கையிடுகின்றோம், உமது உயிர்ப்பையும் எடுத்துரைக்கின்றோம்” என்று பதில் மொழி கூறுகின்றோம்.

இதுதான் பாஸ்கா இயேசுவின் பாடுகள், மரணம், அடக்கம் மற்றும் உயிர்ப்பு முதலியவை மனித குலத்தை மீட்பதற்கான கடவுளின் திட்டமாகும்.

## ஈஸ்டர் திரிடியமும் பாஸ்கா மறைப்பொருளும்

நாம் கொண்டாடிய ஈஸ்டர் திரிடியம் என்பது புனித வியாழன் முதல் ஈஸ்டர் ஞாயிறு வரை உள்ள “மூன்று புனித நாட்கள்” ஆகும். புனித வியாழன் அன்று, இயேசு தம் சீடர்களுடன் கடைசி இராவுணவைப் பகிர்ந்தார். இதன்வழி அவர் பரிசுத்தத் திருவிருந்தை ஏற்படுத்தினார். புனித வெள்ளியன்று, அவர் சிலுவையில் அறையப்பட்டார். பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து நம்மை விடுவிக்கும் உண்மையான பாஸ்கா ஆட்டுக்குட்டியாக அவர் அந்நாளில் பலியானார். ஈஸ்டர் இரவன்றும் ஈஸ்டர் ஞாயிறன்றும் இயேசுவின் உயிர்தெழுதலைக் நாம் மகிழ்ச்சியுடன் கொண்டாடுகிறோம். தமது மரணத்தின் வழியாகவும் உயிர்த்தெழுதலின் மூலமாகவும் இயேசு கடவுளின் அன்பின் ஆழத்தை நமக்கு வெளிப்படுத்துகிறார். அதே வேளையில் நித்திய வாழ்வின் வாயிலையும் அவர் திறக்கிறார். இதனை நாம் தனியாக கண்டுபிடிக்க முடியாது. கிறிஸ்து வழியாகவே இது நமக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

## இறப்புக்கும் நம்பிக்கைக்கும் நடந்த நேரடி சந்திப்பு

சென்ற மாதம், நான் ஸ்ரா அமானில் அமைந்திருக்கும் மவுண்ட் ஒசன்னாவில் இருந்தபோது, என் தந்தை சபாவில் இறந்துவிட்டார் என்ற துயரச் செய்தியைப் பெற்றேன். அவர் அங்கு ஒரு கணக்கியல் நிறுவனத்தை நடத்தி வந்தார். என் தந்தையின் இறுதி சடங்கிற்காக நான் அங்குச் சென்றேன். அடக்கத் திருப்பலி முடிந்தவுடன் அவருடைய உடல் தகனம் செய்யப்பட்டது. சில மணி நேரத்திற்குப் பிறகு தகனம் செய்த இடத்தில், அவரது எலும்புத் துண்டுகளையும் சாம்பலையும் ஒரு பானையில் வைத்து என்னிடம் கொடுத்தனர். அதை நான் குசிங்கிற்குக் கொண்டு வந்து, புனித பேதுரு தேவாலயத்தில் இருக்கும் கொலம்பேரியத்தில் அடக்கம் செய்தேன்.

என் தந்தையின் உடல் அடக்கம் செய்வதற்கு முன் அவரது சவப்பெட்டியின் அருகில் அமர்ந்து செபித்துக்கொண்டிருந்தபோதும் அவரது சாம்பல் அடங்கிய பானையைச் சுமந்தபோதும், என் தந்தையின் வாழ்க்கையைப் பற்றி சிந்தித்தபோதுதான் இறப்பை நான் மிக நெருக்கமாக சந்தித்தேன். குழந்தையாக இருந்த என்னைத் தாங்கிய அவரது கரங்கள், இப்போது சாம்பலாகவும் எலும்பாகவும் என்னிடம் ஒப்படைக்கப்பட்டதை எண்ணி மனம் நொந்தழுதேன். இது ஒரு துயரமிக்க தருணமாக இருந்தாலும் என் தந்தைக்கு நன்றியும் மரியாதையும் செலுத்தும் வேளை என்று நான் கருதினேன்.

## நித்திய வாழ்வின் வாக்குறுதி

துன்ப வேளையில், இயேசுவின் வார்த்தைகள் நமக்கு ஆறுதலும் தைரியமும் அளிக்கின்றன:

“உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே. என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்.” (யோவான் 11:25)

ஒவ்வொரு இறப்பு திருப்பலியிலும் சவபெட்டியைப் பலிபீடத்துக்கு முன் கொண்டு வந்து வைக்கும்போது, உயிரோடிருக்கும்போது இயேசுவின் திருவுடல் பெற்றுக்கொண்டவருக்கு நித்திய வாழ்வைப் பற்றிய கிறிஸ்துவின் வாக்குறுதியை நாம் நினைவுகூறுவோம்:

“விண்ணகத்திலிருந்து இறங்கி வந்த வாழ்வு தரும் உணவு நானே. இந்த உணவை எவராவது உண்டால் அவர் என்றுமே வாழ்வார்” (யோவான் 6:51)

ஒவ்வொரு திருப்பலியிலும் இயேசு தம் உடலையும் இரத்தத்தையும் நமக்கு அப்பமாகவும் பானமாகவும் கொடுக்கின்றார். இது நம்முடைய வாழ்க்கை பயணத்திற்கு நம்மை இன்னும் அதிகமாக பலப்படுத்தும். மேலும் நித்திய வாழ்வுக்காக நம்மைத் தயார் செய்யும் ஓர் ஆன்மீக உணவாகும்.

## ஈஸ்டர்: மரணத்தின் மீது வெற்றி

மனிதனின் வாழ்க்கை பயணம் என்பது பிறப்பு, இறப்பு, அடக்கம் என்பதில் அடங்கியுள்ளது. ஆனால் கிறிஸ்தவர்களுக்கோ இப்பயணம் பாஸ்கா ஒளியால் ஒளியூட்டப்படுகிறது. இயேசுவின் உயிர்த்தெழுதலின் வழி இறப்பு என்பது முடிவல்ல என்பதை நாம் நன்கு அறிகிறோம்.. ஞானஸ்நானத்தின் வழி நாம் இயேசுவின் மரணத்திலும் உயிர்த்தெழுதலிலும் இணைக்கப்படுகிறோம்.

“கிறிஸ்துவோடு நாம் இறந்தோமாயின், அவரோடு வாழ்வோம் என்பதே நாம் கொண்டுள்ள நம்பிக்கை” (உரோமையர் 6:8)

இயேசுவின் உயிர்த்தெழுதல் நமக்கு துன்பத்தில் நம்பிக்கையையும், சோதனைகளில் வலிமையையும், வேதனையில் ஆறுதலும் அளிக்கிறது. நம் வாழ்க்கையில் எல்லாமே முடிந்து விட்டது என்று நினைக்கும் போது இறைவனின் நமக்குக் கொடுத்த வாக்குறுதிகளைப் பற்றிக்கொள்வோம். நாம் சோர்ந்து போகமாட்டோம்.

“நீர் இன்று என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பீர் என உறுதியாக உமக்குச் சொல்கிறேன்” (லூக்கா 23:43)

## நம்பிக்கையும் மகிழ்ச்சியும் நிறைந்த செய்தி

இந்த நாளில், உயிர்த்தெழுந்த ஆண்டவர் மீது நம்முடைய நம்பிக்கையைப் புதுப்பிப்போம். இயேசுவின் மரணம் பாவத்தை வென்றதை எண்ணி மகிழ்வுடன் கொண்டாடுவோம். உயிர்த்தெழுத்தின் மக்களாக நாம் வாழ்வோம். இறை நம்பிக்கையைத் தேடும் மக்களாக இவ்வுலகிற்கு கிறிஸ்துவின் ஒளியைக் பகிர்வோம்.

ஈஸ்டர் மகிழ்ச்சி நம்முடைய இதயங்களை நிரப்புவதாக. ஒரு நாள் நம்முடைய ஆண்டவர் கூறும் அந்த அற்புதமான வார்த்தைகளை நாமும் கேட்போம்:

“உம் தலைவனாகிய என் மகிழ்ச்சியில் நீரும் வந்து பங்குகொள்ளும்” (மத்தேயு 25:23)

கார்டினல், பேராயர்கள், ஆயர்கள், அருட்தந்தையர், டீக்கன்கள், இவர்களுடன் இணைந்து நமது கத்தோலிக்க விசுவாசிகள் அனைவரும் ஆசீர்வதிக்கப்பட்ட ஈஸ்டர் தின நல்வாழ்த்துகள். 2025 ஜூபிலி நம்பிக்கை ஆண்டில் நீங்களும் உங்கள் குடும்பத்தினரும் நிரப்பப்பட வேண்டும் என்று விரும்புகிறேன். அல்லேலூயா! கிறிஸ்து உயிர்த்தெழுந்தார்! அவர் உண்மையாக உயிர்த்தெழுந்தார்!

+Simon Poh


மேதகு பேராயர் டத்தோ டாக்டர்
சைமன் போ,
மலேசியாவின் கத்தோலிக்க ஆயர்கள்
மாநாட்டின் தலைவர்



# சிலுவைப் பயணம் (Perjalanan Salib)

## மலேசிய கத்தோலிக்க இளையர் தினத்தன்று தொடங்கப்பட்டது




கோத்தா கினபாலு: மலேசியாவின் கத்தோலிக்க திருச்சபை, சிலுவைப் பயணம் (Journey of the Cross) எனும் புனிதப் பயணத்தை ஏப்ரல் 3-ஆம் தேதி 2025 அன்று இங்குள்ள புனித திருஇருதய ஆண்டவர் பேராலயத்தில் தொடங்கியது. இத்திருப்பயணம் மலேசியாவின் ஒன்பது மறைமாவட்டங்களை ஜெபம், தியானம் மற்றும் சமுதாய ஒற்றுமையின் மூலம் ஒன்றிணைக்கும் 18 மாத ஆன்மீகப் பயணத்தின் தொடக்கமாகும்.

இச்சிலுவைப் பயணமானது மலேசிய மேய்ப்புப்பணி மாநாடு 2026 (MPC 2026)-க்கு ஒரு முக்கிய முயற்சியாகும். இந்த மாநாடு, மலேசியாவின் அனைத்து ஒன்பது மறைமாவட்டங்களையும் ஒன்றிணைக்கும் முதலாவது வரலாற்றுச் சந்திப்பாக அமைந்தது என்றும் கூறலாம். இந்த நம்பிக்கையின் பயணம் 2018 அறிமுகப்படுத்தப்பட்டது. "கொண்டாடுங்கள், செவி சாயுங்கள், ஒரே திருஅவையாக செயல்படுங்கள்" என்ற கருப்பொருளின் கீழ் முன்னெடுக்கப்பட்ட திருச்சபையின் ஒற்றுமைக்கான பெரும் முயற்சியின் ஒரு பகுதியாகவும் இது கருதப்படுகின்றது.

இந்தத் தொடக்க விழா, மலேசிய கத்தோலிக்க இளையர் தின (MCYD) நிகழ்வுடன் இணைந்து, மார்ச் 31 முதல் ஏப்ரல் 6 வரை கோத்தா கினபாலு மறைமாவட்டத்தில் நடைபெற்றது. நிகழ்வின் நான்காவது நாள், மாலை 3 மணிக்குச் திருச்சிலுவை ஆராதனை மற்றும் ஆசீர்வாதத்துடன் தொடங்கியது. ஒவ்வொரு மறைமாவட்டத்திலிருந்தும் மூன்று பிரதிநிதிகளால் ஒன்பது சிலுவைகள் பவனியாகக் கொண்டு வரப்பட்டு பலிபீடத்தின் முன் வைக்கப்பட்டன. இச்சிலுவைகள் ஒன்பது மறைமாவட்டத்தைப் பிரதிபலிக்கின்றன. ஒவ்வொரு சிலுவையும் மலேசியாவின் தேசிய மலரான புங்கராயா/செம்பருத்தி (Hibiscus) மலர்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. இது கிறிஸ்துவின் உலக வெற்றியையும், தந்தையோடு ஏற்பட்ட சமாதானத்தையும், தூய ஆவியாரின் வழியாக, அனைத்து மக்களிடையேயும் ஏற்படும் ஒற்றுமையையும் குறிக்கிறது.

செம்பருத்தி மலர் நாட்டுப்பற்று, சுதந்திரம் மற்றும் ஒற்றுமையின் தேசிய சின்னமாக விளங்குகின்றது. தொடர்ந்து நடந்த திருப்பலி கொண்டாட்டம், கார்டினல் செபஸ்தியன் பிரான்சிஸ் அவர்களின், தலைமையில் நடைபெற்றது. “சிலுவைகள் மலேசிய திருச்சபையின் நம்பிக்கையின் வலிமையையும் ஒற்றுமைக்கான பயணத்தையும் பிரதிநிதிக்கிறது” என்று அவர் கூறினார். மேலும் “சிலுவைப் பயணம் என்பது ஓர் ஆன்மீகப் பயணமாகும்; இது வெறும் உடல் சார்ந்த பயணமல்ல, இப்பயணமானது விசுவாசிகளிடையே ஒற்றுமையும் சகோதரத்துவ உணர்வையும் வளர்க்கும் நோக்கத்துடன் அமைந்துள்ளது” என அவர் மேலும் வலியுறுத்தினார்.

கார்டினல் செபஸ்தியன் அவர்கள் புருனை, தாய்லாந்து, திமோர் லெஸ்தே மற்றும் மகாவிலிருந்து வந்த பிரதிநிதிகளுடன் இணைந்து இளையர்களைச் கிறிஸ்துவின் சீடர்களாகவும் சாட்சிகளாகவும் மாற வேண்டும் என்று அறிவுறுத்தினார். “நீங்கள் இயேசுவைப் பிறரிடம் அறிமுகப்படுத்துங்கள். அதுதான் அடிப்படையான செயல். அவரை அறிந்தவுடன் அவரை நேசிப்பீர்கள். நேசித்தவுடன் நீங்கள் அவர் மீது அக்கறை கொள்வீர்கள். அக்கறை கொண்டவுடன் அவருக்காக ஏங்குவீர்கள். அவருக்கான ஏக்கத்தினால், அவருடைய அருளுக்கும் ஆசீர்வாதத்திற்கும் காத்திருப்பீர்கள்,” என்று அவர் கூறினார்.

மேலும், இளையர்கள் தங்கள் விசுவாச வளர்ச்சியில் இன்னும் ஆழமாய் இருக்க நான்கு முக்கியப் பகுதிகளில் ஈடுபாடு காட்ட வேண்டும் என்று வலியுறுத்தினார்:

1. திருச்சபையில் சிறிய குழுக்களை உருவாக்குதல்
2. குடும்பங்களை வலுப்படுத்துதல்
3. சமூக நல்லெண்ணங்களை மேம்படுத்துதல்
4. சுற்றுச்சூழல் விழிப்புணர்வை வளர்த்தல்

இவை இறைவன் நமக்கு கொடுத்த கொடைகள். அவற்றை இளைஞர்கள் பிறருடன் பகிர்ந்து, மறைநூலில் அடங்கியுள்ள நற்செய்தியின் மகிழ்ச்சியை கொண்டு செல்லும் பணிக்குப் பங்களிக்க வேண்டும் என்பதையும் அவர் தெரிவித்தார்.

செப்டம்பர் 2026 வரை நீடிக்கும் இந்தத் திருச்சிலுவைப் பயணமானது மலேசியாவின் எல்லா இடங்களுக்கும், உட்பகுதிகளுக்கும் சிலுவை பயணம் இருக்கும். ஒவ்வொரு பங்கிலும் திருச்சிலுவைப் பயணம் நடைபெறும் ஜெபம் மற்றும் தியானத்தின் வழி திருஅவையினரை ஒன்றிணைக்கும். இப்பயணத்தில் நற்செய்தியை மீண்டும் அனைவருக்கும் எடுத்துரைக்க ஒரு வாய்ப்பாகவும் அமையும்.

திருப்பலியின் இறுதியில் ஒன்பது சிலுவைகளும் ஒவ்வொரு மறைமாவட்டத்தின் ஒருங்கிணைப்பாளரிடம் ஒப்படைக்கப்பட்டன. சிலுவைகளை ஒப்படைக்கும் பொழுது, புனித ஹெலேனாவின் ஜெப அட்டையையும் அவர்களுக்குக் வழங்கப்பட்டது. புனித ஹெலேனா புதிய கண்டுபிடிப்புகளின் காவல்னதராவார். இறுதியாக கார்டினல் செபாஸ்தியன், பங்கேற்ற அனைவரோடும் சேர்ந்து புனித ஹெலேனாவின் ஜெபத்தை வழிநடத்தினார், மேலும் இந்தப் பயணத்தின் நோக்கத்தைச் சமூகத்தில் முன்னெடுத்து செல்லும் பணிக்காக இளைஞர்களையும் ஆசீர்வதித்து அனுப்பி வைத்தார்.



இந்தச் சிலுவை மலேசியா முழுவதும் பயணிக்கும்போது, விசுவாசிகளை ஜெபத்திலும் தியானத்திலும் இன்னும் அதிகமாக ஒன்றிணைக்கும் என்பதில் ஐயமில்லை. இப்பயணம் மலேசிய மேய்ப்புப்பணி மாநாடு 2026-க்கான முன்னோடியாக அமையும், அப்போது எல்லா மறைமாவட்டங்களும் ஒன்று கூடி ஆன்மீக சிந்தனையும் சமூகவியல் பங்களிப்பையும் பகிர்ந்துகொள்ளும்.

நமது ஆயர்கள், “இந்தத் திருப்பயணமானது விசுவாசிகளை ஆன்மீகத்தில் இன்னும் ஆழமாக வளர செய்யும். அதோடு நாட்டில் ஒரு வலிமையான, ஒன்றுபட்ட திருச்சபையை உருவாக்கும்” என்று நம்புகின்றனர் மேலும் தூய ஆவியாரால் வழிநடத்தப்படும் இப்பயணம் ஓர் ஆழமான சிநோடல் அனுபவத்துடன் முடிய வேண்டும். அதோடு அண்டை நாடுகளில் இருக்கும் மக்களும் ஒரே நம்பிக்கையிலும், ஒரே பணியிலும் ஒன்றிணைக்கப்படுவார்கள் என்று கார்டினல் செபாஸ்தியன் கூறினார்.

# அவரில் உயிர்க்க ஆவல்!

இன்று நாம் இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த பெருவிழாவைக் கொண்டாடுகிறோம். இயேசு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார் என்பது ஒரு வரலாற்று உண்மை மட்டுமல்ல, அவரது உயிர்த்தெழுதலில் நம்பிக்கைகொண்ட அனைவரின் வாழ்க்கையை மாற்றும் ஒரு நிகழ்வு என்பதை இப்பாஸ்கா பெருவிழா நினைவூட்டுகிறது.

இன்றைய முதல் வாசகம், இயேசுவை அற்புதம் செய்பவராகவும், ஒரு சிறந்த போதகராகவும் மட்டுமல்லாமல், மரித்து, உயிர்த்தெழுந்த அவரை வெளிப்படையாக அறிவிக்கும் பேதுருவின் உரையை விவரிக்கிறது. இயேசுவை அவரது சீடர்கள் கண்டது மட்டுமல்லாமல், அவர் அவர்களுடன் உணவு உண்டு நீர் அருந்தினார் - அவர் வெறும் மாயை அல்ல, ஆனால் மாட்சிபெற்ற உடல் கொண்டவர் என அனைவருக்கும் துணிவோடு சாட்சியம் பகர்கிறார்.

இரண்டாம் வாசகத்தில், புனித பவுல் இயேசு இறந்து உயிர்த்தெழுந்ததால், அவரை நம்புபவர்கள் பாவத்திற்கும் சுயநலத்திற்கும் இறந்து, இயேசு தனது மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் மூலம் கொடுக்கும் புதிய வாழ்க்கையை அடைய வேண்டும் என்கிறார்.

பாஸ்கா ஞாயிற்றுக்கிழமை காலை சூரியன் உதிப்பதற்கு முன்பு மகதலா மரியா கல்லறைக்குச் சென்ற விவரத்தை யோவான் நற்செய்தி விவரிக்கிறது. கல்லறை மூடப்பட்டிருக்கும் என்பதை எதிர்பார்த்து போகிறாள். அங்கு, பாறை அகற்றப்பட்டு கல்லறை காலியாக இருப்பதைக் கண்டு அவள் ஆச்சரியப்படுகிறாள். என்ன நடந்தது என்பதை இன்னும் முழுமையாகப் புரிந்து கொள்ளாமல், சீடர்களிடம் ஓடிச் சென்று காலியான கல்லறையைப் பற்றி அவர்களிடம் கூறுகிறாள்.

பாஸ்கா பெருவிழாவைக் கொண்டாடும் நாம், நற்செய்தியின் மிக அடிப்படையான புரிதலில் திருப்தி அடைந்த வாழ்க்கையை கடந்து செல்கிறோம். கடவுள் மனிதரானார், தம் வாழ்க்கையை வாழ்ந்தார், பின்தொடர்பவர்களைச் சேகரித்தார், கற்பித்தார் மற்றும் அற்புதங்களைச் செய்தார், சிலுவையில் மரித்தார், மீண்டும் உயிர்த்தெழுந்தார், விண்ணகத்திற்கு ஏறினார், தூய ஆவியாரை அனுப்பினார் என்பதை நாம் அறிவோம்.

ஆனால், இயேசுவின் உயிர்ப்பால், கடவுள் நமக்குள் அருள விரும்பும் விடயங்கள் ஏராளம். வாழ்க்கையில் வேறு எதையும் விட கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலில்தான் அதிக மகிழ்ச்சி இருக்கிறது. ஆகவே, வாழ்க்கையின் தாழ்ந்த மற்றும் நிலையற்ற விடயங்களை இலக்காகக் கொள்ளாமல் – உடலின் மாட்சிக்காக மிக உயர்ந்த எண்ணங்களை, செயல்களை இலக்காகக் கொள்வோம். இயேசுவின் சீடர்களாகிய நமது வாழ்க்கை, இயேசுவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் மூலம் நமக்கு வரும் மன்னிப்பு, அமைதி மற்றும் மீட்பில் நம்பிக்கை வைப்பது மட்டுமல்லாமல், உயிர்த்தெழுந்த ஆண்டவருக்கு சாட்சிகளாக வாழ நம்மை அழைக்கிறது.

ஆர்.கே.சாமி, காஜாங்

